**செய்தி வெளியீடு எண்: 192** **நாள்: 07.03.2020**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 6.3.2020 அன்று தலைமைச் செயலகத்தில், தொழில் துறை சார்பில் பெரம்பலூர் மாவட்டம், எறையூரில் அமைந்துள்ள பெரம்பலூர் சர்க்கரை ஆலையில் 138 கோடியே 86 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 18 மெகாவாட் இணை மின் உற்பத்தி நிலையம் மற்றும் முடிவுற்ற ஆலை நவீனமயமாக்கல் பணிகளை துவக்கி வைத்தார்கள்.

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் வருவாயைப் பெருக்கிட தமிழ்நாடு அரசு 10 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மற்றும் 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் 964 கோடியே 88 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இணைமின் திட்டங்களையும், 276 கோடியே 27 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஆலை நவீனமயமாக்கும் திட்டப் பணிகளையும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மூலம் செயல்படுத்தி வருகின்றது.

அதன்படி, பெரம்பலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள பெரம்பலூர் சர்க்கரை ஆலையில் 138 கோடியே 86 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 18 மெகாவாட் இணைமின் உற்பத்தி நிலையம் மற்றும் முடிவுற்ற ஆலை நவீனமயமாக்கல் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் துவக்கி வைத்தார்கள். இதன் மூலம், இந்த ஆண்டு கரும்பு அரவைப் பருவத்தில் இணைமின் உற்பத்தி நிலையம் மற்றும் நவீனமயமாக்கப்பட்ட ஆலையில் உற்பத்தி துவக்கப்படும். மேலும், கரும்பு அரவைப் பகுதி இயந்திரங்களும், கொதிகலனும் புதிதாக நிறுவப்பட்டதால் இயந்திரப் பழுது குறைக்கப்பட்டு, கரும்பு குறித்த காலத்தில் அரைக்கப்பட்டு, விவசாயிகள் வெகுவாக பயன் அடைவார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்களிடம், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (TIDCO) 2018–2019ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் பங்கு ஈவுத் தொகையான 46 கோடியே 28 லட்சத்து 79 ஆயிரத்து 6 ரூபாய்க்கான காசோலையை தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திருமதி காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்களும், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் (SIPCOT) 2018–2019ஆம் ஆண்டிற்கான

தமிழ்நாடு அரசின் பங்கு ஈவுத் தொகையான 52 கோடியே 12 லட்சத்து 12 ஆயிரத்து 500 ரூபாய்க்கான காசோலையை தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்களும், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் (TIIC) 2018–2019ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் பங்கு ஈவுத் தொகையான 3 கோடியே 3 லட்சத்து 52 ஆயிரத்து 280 ரூபாய்க்கான காசோலையை தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் மா. ஆர்த்தி, இ.ஆ.ப., அவர்களும் வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு.எம்.சி.சம்பத், அரசு தலைமைக் கொறடா திரு.எஸ். இராஜேந்திரன், தலைமைச் செயலாளர் திரு.க.சண்முகம், இ.ஆ.ப., தொழில் துறை முதன்மைச் செயலாளர் திரு.நா. முருகானந்தம், இ.ஆ.ப., எரிசக்தித் துறை முதன்மைச் செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) திரு.ஆ.கார்த்திக்,இ.ஆ.ப., தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.விக்ரம் கபூர், இ.ஆ.ப., சர்க்கரைத் துறை ஆணையர் (முழு கூடுதல் பொறுப்பு) திரு. அஜய் யாதவ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 7.3.2020**